## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2013

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் மன்றத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 6,557,901 கிரயமான 57 மோட்டார் சைக்கிள்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது மன்றத்திற்குக் கையளிக்கப்பட்ட ரூபா 272,000,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை வெவ்வேறாக இனங்காணாமல் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம் கட்டிடமாகக் கருதி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வரிசை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 11,439,786 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அப் பொறுப்புக்கள் ரூபா 13,726,972 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 2,287,186 தொகையான வேறுபாட்டினைக் கண்டறிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது 05 நபர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,723,450 பெறுமதியான 5 முச்சக்கர வண்டிகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 504,259 பெறுமதியான கடன் தவணைப் பணம் மற்றும் ரூபா 74,934 தொகையான காப்புறுதித் தவணைப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் விழாவிற்காக நிர்மாணிக்கப்பட்ட வியாபாரக் கொட்டகைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 393,538 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 2,3,4 ஆம் பந்திகள் | சுய அதிகாரம் மற்றும் நோக்கங்களைச் செயற்படுத்துகையிலும் நிறைவேற்றுகையிலும் ஏற்படுகின்ற சகல செலவினங்களும் மன்றம் கட்டியெழுப்பிய நிதியத்திலிருந்து ஏற்க வேண்டிய போதிலும் மன்றத்தினால் செய்யப்பட்ட சகல செலவினங்களும் உரிய வரிசை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.<br><br>தலைவரின் பதிலின் பிரகாரம் அதிகாரச் சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் மன்றத்தில் உழைக்கப்பட்ட பணம் போதியளவாக இல்லாமையினால் மன்றத்தின் ஆரம்பம் முதல் வரிசை அமைச்சின் ஊடாக மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து பணம் வழங்கப்படுகின்றமையும் மீளாய்வாண்டில் மன்றம் உழைத்த பணம் அரசாங்கத்தின் மானியங்களில் 4 சதவீத அளவிலான பணமாக இருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய திருத்த அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) மற்றும் (2) ஆம் பந்திகள் | 2012 ஆம் ஆண்டின் நவம்பர் முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 6,124,786 கூட்டுத்தொகையான ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| | (i) நிதிப்பிரமாணம் 371 | உரிய செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகப் பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மக்கள் சக்தி செயற்திட்டத்தின் முகாமையாளருக்கு 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முற்பணம் முறையே ரூபா 318,867 கூட்டுத்தொகை மற்றும் ரூபா 118,071 கூட்டுத்தொகைகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து |

வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 20,000 எல்லையை விஞ்சி வழங்க கூடாத போதிலும், அதற்கு முரணாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,172,450 கூட்டுத்தொகை செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | மன்றத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள் | ரூபா 387,020,038 கூட்டுப் பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் கணனி மற்றும் மென்பொருளுக்காக நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மன்றத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,661,764 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 54,307,157 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,645,393 தொகையான அதிகரிப்பாகும். மானியம் மற்றும் ஏனைய மாற்றல் கொடுப்பனவுகள் ரூபா 3,012,041 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பு தொடர்பில் பிரதான தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் சக்தி மற்றும் புதிய சக்தி செயற்திட்டத்தின் கீழ் 50,000 நபர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் 250 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 78,000,000 செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 36,140 நபர்களுக்கு மாத்திரம் தகவல் தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்காக ரூபா 60,236,726 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) தொண்டமான் கலாசார நிலையத்தில் பல்வேறு கலாசார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு பயிற்சியாளருக்கு ரூபா 62,500 வீதம் 240

பயிற்சியாளர்களுக்காக ரூபா 15,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 45 நபர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்குவதற்காக ரூபா 8,439,391 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 6,000,000 செலவில் 1,500 இளைஞர் யுவதிகளுக்கு நோர்வூட் விளையாட்டுத் தொகுதியில் விளையாட்டு வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது விளையாட்டு வசதிகளுக்காக பதிவு செய்திருந்த 95 இளைஞர் யுவதிகளுக்காக மன்றத்தால் ரூபா 2,679,494 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மன்றத்தால் பேணப்பட்டு வந்த 42 மக்கள் சக்தி நிலையங்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்கும் போது, காணி உரித்தை கையேற்காது மேலும் 35 மக்கள் சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் போது காணி அளவிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,359,298 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2005 இன் 19 ஆம் இலக்க மன்றம் தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 10(2) பிரிவின் கீழ் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களுக்காக உரித்துறுதிகளைத் தயாரித்தல் 2015 திசெம்பர் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மக்கள் சக்தி செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களை இணைக்கும் நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் மன்றத்திற்கு ரூபா 20,484,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. நியமனக் கடிதம் அல்லது குறிப்பானதொரு பணிக் கையளிப்பு இல்லாமலும் உள்ளபடியாக நிறைவேற்றப்பட்ட கடமைகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமலும் 90 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக அந்த மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட பிரகாரம் பிரதேசங்களின் இணைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக காணப்பட்ட முகாமைத்துவ நலிவின் காரணமாக மன்றத்தின் செயற்திட்ட முகாமையாளரினாலும் மற்றும் செயற்திட்ட இணைப்பாளரினாலும் 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்காக போலியான பெயர்கள் முன்வைக்கப்பட்டு அவர்களின் பிரத்தியோக வங்கிக் கணக்குகளில் தொடர்புபடுத்துதல் படிகளிலிருந்து ரூபா 4,252,500 தொகை செலவு வைக்கப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பின்னர் அந்த உத்தியோகத்தர்களின் பணத்தை மீளச் செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும், 2014 மே 25 ஆந் திகதி வரையில் ரூபா 1,050,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 3,202,500 தொகையினை அறவிடுவதற்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2011 மார்ச் வரையிலான காலப்பகுதியில் பிரதேச இணைப்புப் படியாக ரூபா 5,265,000 தொகை தனியார் வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் மன்றத்தினால் புலன்விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற சொத்துக்கள்

2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் மக்கள் சக்தி செயற்திட்டத்தின் கீழ் 42 மக்கள் சக்தி நிலையங்களுக்கு இணையத்தள சேவையினை வழங்குதல், அதற்காக மதியுரைக் கட்டணங்களைச் செலுத்துதல், 42 V – SAT என்டனா உபகரணத்

தொகுதிகளை கொள்வனவு செய்தல் மற்றும் அந்த உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 131,464,288 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 01 ஆந் திகதி முதல் அந்த சேவையினைப் பெற்றுக்கொள்ளுதல் நிறுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக அந்த 42 உபகரணத் தொகுதிகளும் கணக்காய்வு திகதியான 2016 மே வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த சேவை நிறுத்தப்பட்டமைக்கான பணிப்பாளர் சபை தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மக்கள் தோட்ட அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பினால் 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற விழாவிற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்த வேண்டிய ரூபா 90,577 தொகை மன்றத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் அனுப்புவதிலுள்ள தாமத்தின் காரணமாக, மீளாய்வாண்டின் போது ரூபா 105,448 தொகையான மிகைக் கட்டணம் செலுத்தவேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிகப் பற்று வட்டி ரூபா 409,787 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பதவியணியினர் மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தலைமை அலுவலகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 232 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 188 ஆனமையால் 44 வெற்றிடங்கள் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தலைமை அலுவலகத்தின் கணக்காளர் பதவியை உள்ளடங்களாக 06 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொண்டமான் விளையாட்டரங்கு செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது 12 பதவிகளுக்காக 35 உத்தியோகத்தர்களின் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 32 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக அந்த செயற்திட்டத்தின் நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மதியுரையாளரொருவரினால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதி வைரயிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி 60 வயதினை விஞ்சிய இரண்டு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது படியாக ரூபா 2,098,800 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் மீளாய்வண்டின் நிதிக்கூற்றுக்கள் 16 மாதகால தாமதத்துடன் 2015 யூன் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 மற்றும் 2011 திசெம்பர் 23 ஆந் திகதிய முறையே DMA/2009(1) மற்றும் DMA/ADM/2011/1/26 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை ஏற்படுத்துவற்காக உள்ளகக் கணக்காய்வு பதவியணியினர் பயன்படுத்தப்படாமல் உள்ளகக் கணக்காய்வாளரால் கணக்காளர் பதவியின் வேலை மேவுகை செய்யப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரால் கணக்கு பிரிவின் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமையால் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் ஏற்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

6. **முறைகளும் கட்டுப்பாடுகளும்**

----------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமையினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்
(ஆ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) சொத்துக்களின் நிர்வாகம்